RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1713

OPEN ACCESS

# நற்றிணை குறிஞ்சித்திணையில் பரத்தமை ஒழுக்கம்

**ஆ. பாலகிருஷ்ணன்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, பூ.சா.கோ. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641014, தமிழ்நாடு, இந்தியா

# The Morality of Harlotry in Kurinjithinai

**A. Balakrishnan** [a, *]

[a] Department of Tamil, PSG College of Arts & Science, Coimbatore-641014, Tamil Nadu, India

* Corresponding Author: avbalakrishnan1987@gmail.com

Received: 25-03-2022
Revised: 10-10-2022
Accepted: 30-10-2022
Published: 17-12-2022

Check for updates

**ABSTRACT**

The Sangam literature depicts the life of the ancient people. Ancient Tamil literature describes how the people lived an Akam and Puram life. Through these, the high culture of the time can be understood. The place of human beings in Sangam literature is immense. The notable among them are the harlots. The role of harlots in the lives of the ancient Tamils can be seen in the literature. The Sangam Akam literature speaks extensively of the harlotry discipline. It cannot be avoided that they find a place among the supporting characters of Sangam literature. The purpose of this article, therefore, is to highlight their role in literature from a dialectical point of view.

**Keywords:** Kurinjithinai, Sangam literature, Morality.

## பரத்தை சொல்லாட்சி

தொன்மையும் பழமையும் மிக்க தமிழ் மொழியில் 'பரத்தை' என்பதைக் குறிக்கத் தனிச்சொல் இல்லை. தற்போது இலக்கிய வழக்கில் உள்ள 'பரத்தை' என்ற சொல்லும், 'தாசி' என்ற வடசொல் மட்டுமே உள்ளது என்பர் அறிஞர் (Palanisamy, 1987). பரத்தை என்பது புறப்பெண்டிர் என்றும் மாட்டுப் பிரியும் பிரிவு என்பதும், பரம் என்பது புறம். இஃது ஆரியச் சொல் என்று இறையனார் களவியல் உரை விளக்குகிறது (Nakkheeran, 2010).

## பரத்தமை ஒழுக்கம் தோன்றக் காரணம்

பரத்தமை தோன்ற பல்வேறு காரணங்கள் சொல்லப்படுகிறது. அதில் குறிப்பாக அரசரும் மறவரும் படையெடுப்புக் காலங்களில் வேற்று நாடுகளில் பாசறை அமைப்பர். அப்போது அவர்கள் தம்முடன் குலப்பெண்களை அழைத்துச் செல்ல முடியாத கட்டுப்பாடுகள் இருந்தது. இதனை, “எண்ணரும் பாசறைப் பெண்ணொடும் புணரார்” என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

“போர்க்காலங்களில் பகை நாட்டில் இருந்து அடிமைகளைப் பிடித்து வரும் வழக்கம் அன்றைய நாளில் உலகில் எல்லா நாடுகளிலும் இருந்தது. பெண் அடிமைகளே பெரும்பாலும் பிறநாட்டிலிருந்து கொண்டு வரப்பெற்றனர். பெண் அடிமைகள் பல்வேறு தொழில்களில் அமர்த்தப்பட்டனர். வயதானோர் குழந்தைகளைப் பாதுகாத்து வளர்க்கும் செவிலியராகப் பயன்படுத்தப்பட்டனர். வயதில் இளையோர் சிலர் பரத்தமைக்காகப் பயன்படுத்தப்பட்டனர். ஆடல் பாடல்களை அறிந்த இப்பெண்களுக்குக் கொண்டி

மகளிர் என்று பெயர்.” கொண்டி என்ற சொல் இன்றளவும் கிராமப்புறங்களில் வழக்கில் உள்ளது (Palanisamy, 1987).

தமிழ்ச்சமூகத்தில் பரத்தமை வளர இன்னொரு காரணம் மருதநிலமே. செல்வச் செழிப்பு மிகுந்து காணப்பட்டதால் ஒழுக்கமின்மையும் பெருகியது. இக்காலக்கட்டத்தில் கலைகள் மீதும் ஆர்வம் இருந்துள்ளது. கலைகளில் வேத்தியல், பொதுவியல் எனப் பாகுபாடுகள் இருந்ததையும் இலக்கியங்கள் வழி அறியலாம். கலையே வாழ்க்கைத்தொழிலாகக் கொண்ட பெண்களும் இருந்துள்ளனர். இவர்களை ‘கணிகையர்’ என்று அழைத்துள்ளனர்.

“பரத்தையர் ஒழுக்கம் பழந்தமிழ் மக்களால் கடியப்படவில்லை என்றே தோன்றுகிறது. போர் நிகழ்ச்சிகள் மிக்க சங்க காலத் தமிழகத்தில் மகளிர் தொகை மிகுதியானதால் பரத்தையர் வாழ்வு பெற்றனரோ எனவும் கருத வேண்டியுள்ளது” என்று ஈ.கோ. பாஸ்கரதாஸ் கூறுவதும் சிந்திக்கதக்கது (Bhaskaradas, 1982).

## பரத்தையின் பிரிவை எடுத்துரைக்கும் தொல்காப்பியர்

தொல்காப்பியரும் பரத்தமை ஒழுக்கத்தை இலக்கணத்தில் வகுத்துள்ளதை நோக்கின் பரத்தமை ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகவே இருந்துள்ளது எனலாம். பிரிவில் பரத்தையற் பிரிவு பற்றிய செய்திகளே அதிகம் கூறுகிறார் தொல்காப்பியர். மற்ற பிரிவுகள் பற்றிய தகவல்கள் குறைவு. தலைவன், தலைவி, தோழியோடு காமக்கிழத்தியின் கூற்று முறையும் பரத்தையிற் பிரிவிற்குள் அடங்கும்.

## பரத்தையிற் பிரிவு - தலைவன் கூற்று

தொல்காப்பியர் தலைவன் கூற்றில் அமைந்துள்ள பரத்தையிற் பிரிவின்கண் நிகழ்த்தப்பெறும் நிகழ்வுகளைக் கூறுகிறார்.

“அழியல் அஞ்சலென் றாயிரு பொருளினுந்

பெயர்த்தற் கண்ணும்”

மேற்கண்ட, நூற்பாவில் ஐந்து நிலைகளில் தலைவி ஊடல் கொள்ளுதலும், தலைவன் ஊடலைத் தணிக்க முயல்வதையும் தொல்காப்பியர் எடுத்துரைத்துள்ளார் (Ilampuranar, 2011).

## பரத்தையிற் பிரிவு - தலைவி கூற்று

தொல்காப்பியர் கற்பியலில் தலைமகன் கூற்றாக இல்வாழ்க்கை பற்றியும் பரத்தையிற் பிரிவு பற்றியும் குறிப்பிட்டுள்ளார். தலைவியின் கூற்றில் பெரும்பகுதி ஊடல் பற்றியதாகவே அமைந்துள்ளது.

“கிழவனை மகடூஉப் புலம்பெரி தாகலின்

செப்பல் கிழவி தென்ப”

மேற்கண்ட நூற்பாவில் தலைவியின் கூற்று பதினாறு பொருண்மைகளில் பரத்தையிற் பிரிவு பற்றி தலைவி கூற்றுத் தோன்றுவதை தொல்காப்பியர் எடுத்துரைத்துள்ளார் (Ilampuranar, 2011).

## பரத்தையிற் பிரிவு - தோழி கூற்று

பிரிவின் போது குறிப்பாக பரத்தையிற் பிரிவின் போது தலைவிக்கும் தலைவனுக்கும் இடையே பாலமாக நின்று ஊடலைத் தணிப்பவள் தோழி ஆவாள். தலைவன் தலைவி இருவரையும் இடித்துரைக்கும் நேரத்தில் இடித்துரைத்தும், உண்மையை உணர்த்த வேண்டிய இடத்தில் உணர்த்தியும்

இல்வாழ்க்கை சிறப்படையச் செய்பவளும் தோழியே. இதனை எடுத்துரைக்கும் விதமாகவே தோழிகூற்று அமைத்துள்ளார் தொல்காப்பியர்,

"பெறற்கும் பெரும் பொருள் முடிந்தபின் வந்த

தன்மையிற் கண்ணின்று பெயர்ப்பினும்"

என்னும் நூற்பாவில், பதினைந்து வகைப்பட்ட கருத்துகளும் பரத்தமை ஒழுக்கம் பூண்ட தலைமகளை அவன் உணருமாறு செய்தும், ஊடல் கொண்டுள்ள தலைமகளை அவள் ஊடல் போக்கிட ஆற்றுப் படுத்தியும் தோழி மேற்கொள்ளும் செயல்களாக தொல்காப்பியர் கூறியுள்ளார் (Ilampuranar, 2011). தலைவியின் ஊடல் தணிப்பதில் தோழியே பெறும் பங்கு வகிக்கிறாள்.

"பரத்தமைக் காரணமாகவே தலைவி தன் கணவனிடம் ஊடல் கொள்வாள். பிறவாறு விளையாட்டாக சிறு சிறுகோபம் கொள்பவள் போல் அவள் வம்புக்கிழுப்பதுண்டு. இவையெல்லாம் இன்பப்பொழுது போக்கில் அடங்குவனவாகவும், பரத்தமையால் கொள்வன மன உளைச்சலின் வெளிப்பாடாகவும் காணப்படும். சிறு சச்சரவுடன் இவை முடிந்துவிடும். இவ் ஊடல் தணிப்பவர்களாக பாங்கள், பிற வாயில்கள் பலர் குறிக்கப் பெறுகின்றனர். இதிலும் பெரும்பான்மை தோழியின் முயற்சியே" என்கிறார் (Tamizhannal, 2002).

## பரத்தையிற் பிரிவு

கற்பியலில் பரத்தையருக்குரிய கிளவிகளைக் கூறாத தொல்காப்பியர், செய்யுளியலில் கற்பில் கூற்றிற்குரியவர்களைக் கூறும்போது பரத்தையைக் கூறியுள்ளார்.

"பாணன் கூத்தன்விறலி பரத்தை

பாணஞ் சான்ற அறுவர் கண்டோர்

பேணுதகு சிறப்பிற் பார்ப்பான்முதா

குன்னுறக் கிளந்த அறுவரொடு தொகைஇத்

தொன்னெறி மரபின் கற்பிற் குறியர்"

"பரத்தை வாயில் எனவிரு வீற்றுங்

கிழத்தியைச் சுட்டாக் கிளப்புப் பயனிலவே"

எனக் கிழத்தியைச் சுட்டிக் கூறுதற்குறியவள் பரத்தையே என்று கூறுகின்றார் (Ilampuranar, 2011). பரத்தையிற் பிரிவு சமுதாயத்திலர் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகவே இருந்தது. அதனாலே பிரிவினுள் அது ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது. பெரும்பாலும் மருதத்திணைப்பாடல்கள் எல்லாம் பரத்தையிற் பிரிவு காரணமாகத் தோன்றும் ஊடல்.

## பொருண்மை

"சங்க இலக்கிய மருதப் பாடல்களின் நாடியே ஊடல் (உரிப்பொருள்) ஆகும். தலைவி, தலைவன் பரத்தை எனும் முக்கோணக் காதல் வாழ்வில் ஏற்படும் காதற் கசப்புகள் ஊடலாகப் பரிணமிக்க காணலாம்.

"வளமார்ந்த மருதநிலச் செல்வசெழிப்பு ஆடவன்

ஒருவனுக்குப் பல் மனைவியரைக் கூட்டுவித்தது"

அன்பின் ஐந்திணையில் பரத்தமைக்கும் இடம் தரப்பட்டுள்ளன (Selvarasu, 2018). வாயில் வேண்டல் பரத்தையிற் பிரிவில் முதலிடம் பெறுகிறது. தலைவன் வாயில் வேண்டலின்போது மறுப்பாக, தலைவி வாயில் மறுத்தல், தோழி வாயில் மறுத்தல் என இரண்டு நிலையைக்

காணமுடிகிறது. தலைவனிடம் வாயில் மறுத்து கூறுவது. வாயில்களிடம் வாயில் மறுத்து கூறுவதும் உண்டு. பாணர், விறலியர் போன்றவர்களிடத்தும் வாயில் மறுத்தல் கூற்றுகள் உண்டு. தோழியிடமே தலைவி வாயில் மறுத்து உரைத்தலும் உண்டு. வாயில் வேண்டல், வாயில் மறுத்தல், வாயில் நேர்தல் போன்ற துறைகளின் வாயிலாகக் பரத்தையின் உறவால் ஏற்படும் ஊடல் நிலையினை எடுத்துரைத்துள்ளனர் புலவர் பெருமக்கள்.

## நற்றிணையில் பரத்தையிற் பிரிவுக் கூற்றுகள்

பரத்தையின் பிரிவு காரணமாக நற்றிணையில் நிகழும் கூற்றுகள் முப்பத்தாறு. இதில் குறிஞ்சி திணையில் இடம் பெறும் கூற்றுகள் இரண்டு மட்டுமே.

1. பரத்தை தலைவியின் பாங்கிக்குப் பாங்காயினார் கேட்ப விறலிக்குச் சொல்லியது -நற்றிணை - 176 (குறிஞ்சி)
2. அ) வன்புறை எதிரழிந்தது - நற்றிணை (குறிஞ்சி) - 225
   (ஆ) பரத்தைத் தலைமகட்குப் பாங்காயின வாயில்கள் கேட்பச் சொல்லியதூஉமாம்.

பரத்தை தலைவி பாங்காயினோர்க்கு உரைத்தல் வகையில் உள்ள பாடல் நற்றிணை குறிஞ்சி திணையில் ஒன்று மட்டுமே காணப்படுகிறது. பரத்தை தலைவி பாங்காயினாரிடம் நிகழ்த்தும் கூற்றுகள்அவளது இயல்பினை அறியத் துணை நிற்கின்றன.

தலைவி தான் பூப்பு நீராடியதை உணர்த்த வேண்டித் தன் தோழியைச் செவ்வணி செய்து விடுப்பாள். இச்செவ்வணி கண்டு தலைவன் தன் மனையிற் மீண்டும் புக மாட்டான் என்பதை அறிந்து பரத்தை கோபங்கொள்கிறாள். தலைவன் தன் கையைப் பற்றியபோது இதனைத்தான் தலைவியிடம் சொல்லப்போவதாகக் கூறியபோது அவன் நடுங்கிய நடுக்கத்தினை நினைக்கும் பொழுது நகைப்பாக உள்ளது என்பர். செவ்வணி கண்டவுடன் சில நேரங்களில் உலகியல் கருதித் தலைவனை விடுத்தாலும், தான் தலைவியைத் திருப்திப்படுத்தவோ, அவளுக்கு அஞ்சி அங்ஙனம் செய்ததாக ஊரார் பழி கூறுகின்றனர். ஆதலால் தான் தலைவனை மீண்டும் கைகொள்ளப் போவதாகவும் தலைவியின் பாங்காயினார் கேட்குமாறு தன் தோழியிடம் பரத்தை கூறுவதை,

“எம் நயந்து உறைவி ஆயின் யாம்நயந்து

நல்கினம் விட்டதென் நலத்தோன்

குன்ற வேலித்தம் உறைவின் ஊரே”

என்னும் பாடல் வழி அறியலாம் (Narayanasamy Iyer, 1952). மற்றொரு பாடல் தலைவியின் கூற்றாகவும், பரத்தையின் கூற்றாகவும் இடம் பெற்றுள்ளது.

தலைவன் பலர் மட்டும் இன்பம் துய்ப்பது போலத் தன்னிடத்தும் வந்தான். அப்படி அவனே விரும்பி தன் நலம் துய்க்க வந்ததனால், தலைமகள் வருந்துவதால் யாது? பயன் என்றும், தலைவன் இல்லாத ஊர் துன்பம் என்றும் தலைவி பாங்காயினார் கேட்குமாறு கூறுகிறாள். தலைவனின் பரத்தமைப் பண்பினை அறிந்திருந்தும் அவன் இல்லாதவூர் துன்பம் தரும் என்று பரத்தை கூறுவது அவள் தலைவன் மேல்கொண்டுள்ள அன்பு மிகுதியினைக் காட்டுகிறது. அதே நேரத்தில் தலைவியை இகழ்ந்து,

“பூவொடு துயல்வரும் மால்விரை தாடனை

இரந்தோர் உளர்கொல் தோழி திருந்திழைத்

தொய்யில் வனகுலை வரிவனப்பு இழப்பப்

பசந்தெழு மருவரல் தீர

நயந்தோர்க் குதவா நாரின் மார்பே” (Narayanasamy Iyer, 1952)

நாடனது மார்பை நாம் இறந்து, பெறவில்லையே தலைமகள் வருந்துவது ஏன்? என்று பரத்தை கூறுவது அவளின் செருக்கினைப் புலப்படுத்துகிறது. நற்றிணை குறிஞ்சித் திணையில் இடம் பெற்றுள்ள இரண்டு பாடல்களிலும் பரத்தையின் செருக்கினைக் காண முடிகிறது.

## முடிவுரை

பரத்தை மணம் செய்து மனைவியாகாவிட்டாலும் தலைவிக்கு இணையான உரிமை கொள்பவளாக இருக்கிறாள் என்பதை அறியமுடிகிறது. பரத்தைக்கு குழந்தைகள் இருப்பதாகத் தெரியவில்லை. வெள்ளணி கண்டு தலைவன் பிரியும் போது உலகியல் எனக் கருதி விட்டுக் கொடுக்கும் பண்பு பரத்தைக்கு பெருமை சேர்ப்பதாக அமைகிறது. பரத்தை தலைவன் மீது கொண்ட அன்பால் அவனை தன்பால் வைத்து கொள்ளவும், தலைவனே தன்னை நாடி வந்தான் என்று செருக்குடன் தன் ஆளுமை தோன்ற எடுத்துரைத்தலைக் காணமுடிகிறது. பரத்தை ஒழுக்கம் சங்க காலத் தமிழகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவே இருந்துள்ளதை அறிய முடிகிறது.

## References

Bhaskaradas, E.K. (1982) Agaporul Paadalgalil Thalaivi, Tamil Writers Cooperative, Tirunelveli, India.

Ilampuranar, (2011) Tholkappiyam Porulathikaram- Ilampuranar Urai, First Edition, Saradha pathippagam, Chennai, Tamil Nadu, India.

Nakkheeran, (2010) Iraiyanar Agaporul, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Narayanasamy Iyer, A. (1952) Natrinai, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Palanisamy, M. (1987) Sanga illakkiyathil thunai manthar, Ph. D thesis, PSGR Krishnammal College of Womens, Coimbatore, India.

Selvarasu, N. (2018) Tholkappiyam Sanga Illakkiyam, New Century Book House, Chennai, India.

Tamizhannal, (2002) Natrinai Malarkal, Koviloor Madalayam, Koviloor, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License